VELAMMAL
INSTITUTE OF TECHNOLOGY

# CHANAKYA-2K16




## 08.03.2016





தினபூமி, சென்னை
மார்ச் 08, 2016
thinaboomi.com


### வேலம்மாள் தொழில் நுட்பக்கல்லூரியில் தேசிய கருத்தரங்கு

பொன்னேரி மார்ச்.08-

பொன்னேரி அடுத்த பஞ்செட்டி வேலம்மாள் தொழில்நுட்பக்கல்லூரியில் கணினி பொறியியல் துறையில் சாணக்யா 2கே16 எனும் தலைப்பில் தேசிய அளவிலான தொழிநுட்ப திட்டக் கருத்தரங்கு கல்லூரி முதல்வர் முனைவர் டி.சந்திரசேகர் தலைமையில் நடைப்பெற்றது.இதில் கணிப்பொறி அறிவியல் துறைத்தலைவர் எல்.மரியமைகேல் விஸ்வம் வரவேற்புரை நிகழ்த்தினார்.சென்னை எல்த்கேர்-சி.டி.எஸ் உதவி இயக்குநர் ரவிஷங்கர் தியாகராஜன் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு கணினி தொழில் நுட்பத்தில் புதிய கண்டு பிடிப்புகளின் பங்களிப்பும் அவற்றின் முக்கியத்துவத்தை பற்றியும் மாணவர்களுக்கு விளக்கினார்.தமிழகம் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து பல்வேறு கல்லூரிகளைச்சேர்ந்த 400க்கும் மேற்பட்ட மாணவ,மாணவியர்கள் தங்களது படைப்புகளை சமர்பித்தனர்.அவை இன்போஸிஸ் மற்றும் சி.டி.எஸ் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் பகுப்பாய்வு செய்யப்பட்டு சிறந்த படைப்புகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.இறுதியில் துணைப்பேராசிரியர் ரெஜின்பௌல் முடிவிரை வழங்கினார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

**07.03.2016**

## வேலம்மாள் கல்லூரியில்
# தொழில்நுட்ப கருத்தரங்கு

பொன்னேரி, மார்ச் 7: பொன்னேரி அடுத்துள்ள பஞ்செட்டி வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியில், கணினி பொறியியல் துறை சார்பில், 'சாணக்யா 2K16' என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம், நேற்று முன்தினம் கல்லூரி வளாகத்தில் நடந்தது. கல்லூரி முதல்வர் டி.சந்திரசேகர் தலைமை வகித்தார். கணினி பொறியியல் துறை தலைவர் மரிய மைக்கேல் விசுவாசம் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, சென்னை சிடிஎஸ் ஹெல்த் கேர் உதவி இயக்குநர் ரவிசங்கர் தியாகராஜன் கலந்து கொண்டு, கணினி தொழில்நுட்ப புதிய கண்டுபிடிப்புகளின் பங்களிப்பு மற்றும் முக்கியத்துவம் பற்றி மாணவர்களிடம் விளக்கி பேசினார்.

கருத்தரங்கில், தமிழகம் மற்றும் பல்வேறு மாநிலங்களில் உள்ள கல்லூரிகளை சேர்ந்த 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு, தங்கள் படைப்புகளை வெளியிட்டனர். இதை, இன்போசிஸ் மற்றும் சிடிஎஸ் நிறுவனங்களை சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆய்வு செய்து, சிறந்த படைப்புகளை தேர்வு செய்தனர். சிறந்த படைப்புகளை உருவாக்கிய மாணவ, மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முடிவில் உதவி பேராசிரியர் ரெஜின் பவுல் நன்றியுரை கூறினார்.




வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியில் நடந்த தேசிய கருத்தரங்கில், சென்னை சிடிஎஸ் ஹெல்த் கேர் உதவி இயக்குநர் ரவிசங்கர் தியாகராஜன் பேசுகிறார். அருகில், கல்லூரி நிர்வாகிகள்.

தினமணி

**07.03.2016**

# வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியில் அறிவியல் கண்காட்சி

பொன்னேரி, பிப். 28: பஞ்செட்டியில் உள்ள வேலம்மாள் தொழில்நுட்பக் கல்லூரியில் பிப்ரவரி 26, 27 ஆகிய இரண்டு நாள்கள் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.

ஜியோ அறிவியல் துறையைச் சார்ந்த ஆர்.கிருஷ்ணமூர்த்தி கண்காட்சியைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். கல்லூரி ஆலோசகர் ரசாக், கல்லூரி முதல்வர் டி.சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை முதல்வர் செளந்தர்ராஜன் வரவேற்றார். பல்வேறு துறைகளைச் சார்ந்த மாணவ, மாணவிகளால் உருவாக்கப்பட்ட 400-க்கும் மேற்பட்ட அறிவியல் சார்ந்த ஆராய்ச்சியின் மாதிரிகள் கண்காட்சியில் வைக்கப்பட்டன. அறிவியல் கண்காட்சியின் நிறைவு விழா சனிக்கிழமை நடைபெற்றது. இதில் வேலம்மாள் அறக்கட்டளையின் இயக்குனர் சசிக்குமார், ஆலோசகர் வாசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஹேமலதா நன்றி தெரிவித்தார்.

சென்னை கோவை சேலம் திருச்சி மதுரை நெல்லை நாகர்கோவில் வேலூர் புதுவை

தமிழ் முரசு

நம்பர் 1 மாலை நாளிதழ்    www.tamilmurasu.o

**07.03.2016**




பஞ்செட்டி வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் சந்திரசேகர், ரவிசங்கர் தியாகராஜன் உள்பட பலர் பங்கேற்றனர்.

பொன்னேரி அருகே

# வேலம்மாள் கல்லூரி அறிவியல் கருத்தரங்கு

## மாணவர்களுக்கு பரிசு

பொன்னேரி, மார்ச் 7-
பொன்னேரி அடுத்த பஞ்செட்டி வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரி கணினி பொறியியல் துறை சார்பில் 'சாணக்யா 2K16' என்ற தலைப்பில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கு நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் டி.சந்திரசேகர் தலைமை தாங்கினார். கணினி பொறியியல் துறை தலைவர் மரியமைக்கேல் விசுவாசம் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, சென்னை சிடிஎஸ் ஹெல்த் கேர் உதவி இயக்குநர் ரவிசங்கர் தியாகராஜன் கலந்து கொண்டு, கணினி தொழில்நுட்ப புதிய கண்டுபிடிப்புகளின் பங்களிப்பு மற்றும் முக்கியத்துவம் பற்றி மாணவர்களிடம் விளக்கி பேசினார்.

இக்கருத்தரங்கில் தமிழகம் மற்றும் பல்வேறு மாநிலங்களில் உள்ள கல்லூரிகளை சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு, தங்கள் படைப்புகளை வெளியிட்டனர். இதை இன்போசிஸ் மற்றும் சிடிஎஸ் நிறுவனங்களை சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆய்வு செய்து, சிறப்பு படைப்புகளை தேர்வு செய்தனர்.

அப்படைப்புகளை உருவாக்கிய மாணவ, மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. துணை பேராசிரியர் ரெஜின் பவுல் நன்றி கூறினார்.